RESEARCH ARTICLE

DOI: 10.34256/ijot2132

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

# சங்க இலக்கியத்தில் இறைக்கொள்கை

## மு. பரமேஸ்வரி [அ,*]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ சங்கர்லால் சுந்தர்பாய் ஷசுன் ஜெயின் மகளிர் கல்லூரி, சென்னை-600017, இந்தியா

# Analysis of Theological principles in Sangam Literatures

## M. Parameshwari [a, *]

[a] Department of Tamil, Shri Shankarlal Sundarbai Shasun Jain College for Women, Chennai- 600017, India
*Corresponding author Email: parameswari.malarvizhi@gmail.com
DOI: https://doi.org/10.34256/ijot2132
Received: 25-05-2021; Revised: 14-06-2021; Accepted: 15-06-2021; Published: 17-06-2021

**Abstract:** From the time of the birth of mankind to the present day, the thought of God has existed. The highest principle of human life is the devotional principle of love and worship of God. Just as food is needed to grow the body, godly thought is needed to perfect life. The process essays of man to reach God are called worship. Worship is the conversion of the individual into a social life and making him loving, gracious and disciplined. Greeting the deity and the belief that the deity will protect us; It is seen from the time of Tholkappiyar to the present day. The people of the Sangam age have lived with faith and devotion. They prayed to the gods to help them in the success of their efforts, to avoid harm, and to make life longer in this world and the hereafter. During the Sangam period, the faith in God did not take shape. God worship started as a natural worship in the early days and grew into an ancient cult and has evolved into religion today. During the Sangam period, there were five types of land systems namely Kurinji, Mullai, Marudham, Neytal and Palai. It is also known from ancient Tamil literature and the grammar of the people of the land that they worshipped their respective deities. Lord Muruga as the land god of Kurinji, Indra as the god of Maruthanila, Varuna as the land god of Neytal and The Land God of Palai can be seen through the Sangappas. In sangam literature, there are stories about the deities Shiva, Murugan, Thirumal, kotravai, Indra and Thirumagal and the methods of worshipping them.

**Keywords:** Sangam Literature, God, Shiva, Thirumal, kotravai

## முன்னுரை

சங்கத் தமிழர்களின் அகம், புறம் என்ற கூறுகளின் வழி அவர்களின் வீரவரலாற்றையும் சமூக வரலாற்றையும் பண்பாட்டுச் சிறப்புகளையும் அழகுற வெளிப்படுத்துபவை சங்க இலக்கியங்கள் ஆகும். இப்பண்பாட்டுச் சிறப்புகளின் மூலம் சங்ககாலத் தமிழர்களின் இறைவழிபாட்டுக் கொள்கைகளை அறியமுடிகிறது. சங்க இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கை முறைகள் பற்றி எடுத்தியம்புகின்றன. மக்கள் வாழும் இயற்கைக்கேற்ப அவர்களின் வாழ்வியல் முறைகள் மாறுபடய்டுக் காணப்பட்டதைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது. சங்க காலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நில அமைப்புகள் இருந்தன. அந்தந்த நிலத்து மக்கள் அவரவருக்குரிய தெய்வங்களை வழிபாடு செய்து வந்தனர் என்பதனையும் பண்டைய தமிழ் இலக்கியங்கள் வாயிலாகவும் அவற்றிற்கு இலக்கணமாக விளங்கும் தொல்காப்பியம் வாயிலாகவும் அறியமுடிகின்றது. குறிஞ்சி நிலக்கடவுளாக முருகப்பெருமானும், மருதநிலக் கடவுளாக இந்திரனும், நெய்தல் நிலக்கடவுளாக வருணனும், பாலை நிலக்கடவுளாகக் கொற்றவையும் விளங்கியதைச் சங்கப்பாக்கள் வாயிலாக உணரமுடிகிறது. இப்பாடல்கள் மூலம் சங்கத் தமிழர்களின் இறைவழிப்பாடு

பற்றிய கொள்கைகளை அறிந்துகொள்ள முடிகின்றது. சங்ககாலத்தில் நிலவிய இறைக்கொள்கை பற்றி இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது. தமிழரிடையே நிலவியதற்கு சங்கப்பாடல்களே சான்றாக நிலவுகின்றன.

## இயற்கை

சங்கத்தமிழர் வெள்ளம், புயல், மழை, கொடிய விலங்குகள் போன்றவற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள இயற்கையைக் கடவுளாகக் கருதி வழிபட்டுள்ளனர். மலை, கடல், காடு, நீர்நிலைகள், மரம், சோலை போன்றவற்றில் கடவுள் உறைவதாக நம்பினர். அவற்றை வழிபடுவதன்மூலம் தீய சக்திகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளலாம் என்று எண்ணினர். கடவுள் என்ற கருத்து தொடக்கக் காலத்தில் உருவமற்ற பேராற்றலைக் குறித்துள்ளது. இத்தகைய இயற்கை இகந்த பேராற்றல்களை வழிபாடு செய்த முறை பற்றிச் சங்க இலக்கியத்தில் பதிவுகள் காணப்படுகின்றன.

“தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்”

“கடவுள் மரத்த முள்மிடை குடம்பை”
“பெருங்கடல்பரப்பின் அமர்ந்து உறை அணங்கோ”

“துறை எவன் அணங்கும்

மேற்கண்ட பாடலடிகளின் வாயிலாக சங்கத்தமிழர் இயற்கையை கடவுளாகக் கருதி வழிபட்டமை புலப்படுகிறது.

## நடுகல்

மேலும் போருக்குச் சென்று இறந்த வீரர்களின் நினைவாக நடப்பெற்ற நடுகல்லை வழிபடுவது சங்ககால மக்களின் வழக்கத்தில் இருந்துள்ளது. நடுகல்லை நன்னீர் கொண்டு நீராட்டுதல், அதன்மேல் மஞ்சள் பூசுதல், மயிற்பீலி சூட்டுதல், மாலை சூட்டுதல், கள் வைத்து வணங்குதல், நறுமணத் தூபம் காட்டுதல், குருதி பலி கொடுத்தல் போன்றவை நடுகல் வழிபாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனைப் பின்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

“பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்

வேலூன்று பலகை வேற்றுமனை கடுக்கும்”

“வலாண் பதுக்கைக் கடவுள் பேண்மார்

நடுகல் பீலிசூட்டி துடிப்படுத்து

தோப்பிக் கள்ளொடு துரூஉப் பலி கொடுக்கும்”

மேற்கூறிய பாடலடிகளில் கூறப்பெற்ற நடுகல் வழிபாடுதான் பின்னர் குலதெய்வம் உருவாவதற்கான அடிப்படை என்பதை கருதமுடிகிறது.

## சிவன்

சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள தெய்வ வழிபாடுகளுள் தலைமையானது சிவவழிபாடு ஆகும். சிவபெருமான் சிவன் என்ற சொல்லால் குறிக்கப்பெறாது ஆதிரையான், ஆலமர் செல்வன், ஆனேற்றுக் கொடியுடையான், ஈசன், ஈர்ஞ்சடை அந்தணன், காலக் கடவுள், தாழ்சடைப் பெரியோன், நீலமேனி வாலிழைபாகத்து ஒருவன், மணிமிடற்றன், முக்கட் செல்வன் என்ற பெயர்களால் அழைக்கப்பெறுகிறான். மேலும் சக்தியாகிய பெண் தெய்வங்களுடனும், தன் திருமேனிக்கு உரிய பெயர்களுடனும் சங்க இலக்கியங்களில் சிவபெருமான் இடம்பெற்றுள்ளான். வழிபாட்டில் அவனுக்கென்று தனியே கோயில் அமைத்து வழிபடும் வழக்கமும் ஊருக்கு நடுவே மன்றங்கள்

அமைத்து வழிபடும் வழக்கமும் சங்ககாலத்தில் இருந்தமையை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. இவற்றை,

“இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்”

“நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்”

“தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே”

“ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை

மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்”

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன. மேலும் சிவபெருமானின் உருவச் சிறப்பு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. உமையம்மையை ஒரு பாகத்தில் கொண்ட நீலநிறம் உடைய திருமேனியை உடையவன்(ஐங்.க.வா.1) என்றும் செவ்வான் அன்ன மேனியன்(அகம்.க.வா.8) என்றும் நெற்றியில் இமையாத கண்ணை உடையவன் என்றும் திருமுடியில் கொன்றை மாலை அணிந்தவன்(கலி.142:27-28) என்றும் கழுத்தில் கருப்பு நிறத்தை உடையவன் என்றும் சிவபெருமானின் கங்கையைச் சடையில் சூடியவன்(பரி.9:6-7) என்றும் அவனது திருமேனி சுட்டப்பட்டுள்ளது.

உருவ வழிபாடுகளைக் கூறுவதோடு சிவனின் செயல்களைக் கூறும்வகையில் பொன், வெள்ளி, இரும்பு மதில்களைக் கொண்டு மூன்று நகரங்களில் வாழ்ந்த அரக்கர்களை அழித்த சிவபெருமான்(பரி.5:25-27) பற்றியும், ஆலமரத்தின் கீழ் அமர்ந்து அறம் உரைத்த செய்தியையும்(புறம்.198:9), இராவணனை அடக்கிய செயலைப் பற்றியும்(கலி.38:1-5) சங்க இலக்கியத்தில் பதிவுகள் காணப்படுகின்றன.

மேலும் சிவபெருமானுக்கு உகந்த நாளாக திருவாதிரையில் சிவபெருமானுக்கு விழாக்கள் எடுக்கப்பட்டன. அதுமட்டுமின்றி மார்கழித் திருவாதிரை நாள் மிகவும் சிறப்புடைய நாளாகக் கருதப்படுகிறது. கார்காலத்தின் இறுதிப்பகுதியாகிய மார்கழி மாதத்தில் முழுமதி நாளான திருவாதிரை நாளில் சிவபெருமானுக்கு வழிபாடுகள் சிறப்பாகச் செய்யப்பட்டவை குறித்தும் பதிவுகள் காணப்படுகின்றன. மேலும் அவிர்சடை முனிவர்கள் சிவனுக்கு வேள்வித் தீ வழிபாடு செய்தது பற்றிப் புறநானூறு (251:6-7) குறிப்பிடுகிறது.

## திருமால்

முல்லை திணைக்குரிய தெய்வமாகத் திருமால் குறிப்பிடப்படுகிறார். இதனை தொல்காப்பியம் “மாயோன் மேய காடுறை உலகமும்” என்கிறது. காத்தல் கடவுளாகத் திருமால் திகழ்வதால் இவ்வுலக வாழ்வில் மக்களைக் காக்கும் மன்னன் திருமாலோடு ஒப்பிடப்படுகிறான். தொண்டைமான் இளந்திரையன் என்ற பாண்டிய மன்னன் திருமால் மரபில் தோன்றியவன் என்றும் அவனது தலைநகரான காஞ்சியைக் குறிக்குமிடத்துப் பிரம்மதேவனைப் பெற்ற திருமாலினது திருவுந்திக் கமலத்தைப் போன்ற பழமையும் சிறப்பும் வாய்ந்தது என்றும்(பெரும்.402-405) குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நகர் எல்லையில் உள்ள திருவெஃகா என்னும் திருக்கோயிலில் திருமால் பாம்பணையில் பள்ளி கொண்டருளிய கோலம்(பெரும்.371-372) பற்றிச் சங்க இலக்கியத்தில் பதிவு காணப்படுகிறது. இதன்மூலம் சங்க காலத்தில் திருமாலுக்குக் கோயில் இருந்ததையும் திருமால் பாம்பணையில் பள்ளிக் கொண்டிருந்ததையும் அறியமுடிகிறது.

“இருநிலம் கடந்த திருமறு மார்பின்

முந்நீர் வண்ணன் பிறங்கடை அந்நீர்த்

திரைதரு மரபின் உரவோன் உம்பல்”

மேலும் திருமாலின் பத்து அவதாரங்களும் உலகில் தீமையை அழித்து நன்மை பயப்பதற்காகவே தோன்றின என்பர். அவற்றுள் வாமன அவதாரம் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் மக்களுக்கும் துன்பம் விளைவித்துக் கொண்டிருந்த மகாபலி என்ற அசுரனை அழிப்பதற்காகத்

தோன்றிய அவதாரம் என்பதையும் அவன் உலகளந்த செய்தியையும் கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுகின்றார்.

"இருநிலம் கடந்த திருமறுமார்பின்

முந்நீர் வண்ணன்"

மேலும் அசுரனை அழித்ததற்காக திருவோண திருவிழா இன்றுவரை கொண்டாடப்படுகிறது. ஐம்பூதங்களுடன் ஞாயிறு, திங்கள், வேள்வி முதல்வன் எனும் அட்டமூர்த்தியாகவும் கோள்களின் வடிவமாகவும் அசுரர்களும் ஆதித்தர்; பன்னிருவரும் வசுக்குள் எண்மரும் உருத்திரர் பதினொருவரும் கூற்றுவனும் ஆகிய இருபத்தொரு உலகமாகவும் அவ்வுலகத்தில் வாழும் உயிர்க் கூட்டங்களாகவும் உள்ளவனன் என்றும் தாமரைப் பூவில் பிறந்த பிரம்மனுக்கும் தந்தையாக இருப்பவன் என்றும் வேதங்கள் சுட்டுவதாகப் பரிபாடல் (1:40-51) திருமாலை முதன்மைப்படுத்திக் கூறுகிறது.

கார்காலத்தில் மிகப்பெரிய மேகம் ஒன்றினை ஞாயிறும் திங்களும் இருபறமும் நின்று அழகு செய்வதைப் போல திருமால் ஆழிப்படையினையும் சக்கரப் படையினையும் கொண்டு நிற்கிறான் என்று பரிபாடல் சுட்டுவதன்மூலம் திருமாலின் படைக்கருவிகளாகச் சங்கும் சக்கரமும் இருந்தமையை அறியமுடிகிறது. மேலும் உலகில் தோன்றும் அனைத்துப் பொருள்களாக திருமால் விளங்குகின்றான் என்பது பற்றிப் பரிபாடலில் (3:63-68) குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் திருவனந்தபுரத்துக் கோயிலில் திருமாலை சேர அரசன் செல்வக்கடுங்கோ வாழியாதனும் ஆண்கள் தம் மனைவி மக்களுடன் சென்று மலரும் தூபமும் கொண்டு திருமாலை வழிபட்ட செய்தி இடம்பெற்றுள்ளது. சேர அரசன் திருமாலுக்கு தானமாக ஊர் வழங்கியது (பதிற். பதிகம்.8-9) குறித்தும் சங்கத்தமிழர் திருமாலுக்குரிய உகந்த நாளாகிய ஓண நன்னாளில் விழா கொண்டாடியது பற்றியும் பதிவுகள் காணப்படுகின்றன.

"கணங்கொள் அவுணர் கடந்த பொலந்தார்

மாயோன் மேய ஓண நல்நாள்"

சங்கத்தமிழர் கொண்டாடிய ஓணத்திருநாள் இன்றுவரை கொண்டாடப்படுவதைக் காணமுடிகிறது.

திருமாலின் அருள் தன்மை அடியார்களுக்கு இன்பம் தருவதாகவும் பகைவர்களுக்குத் துன்பம் தருவதாகவும் அமையும் இயல்பினை உடையதாகும். திருமாலின் பகைவர்களை அழிக்கும் கோபகுணமும் அருள்கின்ற குணமும் சூரிய மண்டலத்திலும் அடியார்களுக்கு அருளும் அருள்குணமும் அரவணைக்கும் மென்மையும் நிலவில் உள்ளன. திருமாலின் அருள் வழங்கும் கொடைப்பண்பு மேகமண்டலத்தில் உள்ளது. திருமாலின் உடல் நிறமும் ஒளியும் காயாமலரில் உள்ளன. பெருமையும் உருவ வெளிப்பாடும் கடலிடம் உள்ளது. இவ்வாறாகத் திருமாலின் உருவம் உலகப் பொருள்களில் எல்லாம் நீக்கமற நிறைந்து அருள் வழங்கும் தன்மையாக இருக்கிறது என்பதைப் பரிபாடல்(4:25-35) விளக்குகிறது.

## இந்திரன்

வயலும் வயல் சார்ந்த மருதநிலக் கடவுளாக இந்திரன் சுட்டப்படுகின்றான். இதனை, "வேந்தன் மேய தீம்புனல் உலகமும்" (தொல். புறத்.5) என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். இந்திரன் ஆயிரம் கண்களை உடையவன் என்றும் நூற்றுக்கு மேற்பட்ட வேள்விகளை செய்தவன் என்றும் எதிர் நின்ற பகைவர்களை அழித்து வெற்றி பெற்றவன் என்றும் நான்கு கொம்புகளை உடைய அழகிய நடையையும் நீண்ட துதிக்கையையும் உடைய வெள்ளை யானையின் பிடரியின் மீதேறி வருகின்ற சிறப்பினை உடையவன் என்றும் நக்கீரர் குறிப்பிடுகிறார்.

"நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல

வேள்வி முற்றிய வென்றுஅடு கொற்றத்து

ஈர்-இரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடை

தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை

எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்"

மேலும் இந்திரனின் ஆயுதமாக வச்சிராயுதப்படை காணப்பட்டதை பின்வருமாறு அறியமுடிகிறது.

"வச்சிரத் தடக்கை நெடியோன்"

## முருகன்

குறிஞ்சி நிலத்தெய்வம் முருகன்; "சேயோன் மேய மைவரை உலகமும்"17 என்கிறது தொல்காப்பியம். முருக வழிபாடு சங்க அக இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. குறிஞ்சி நிலத்தெய்வமாகிய முருகனுக்கு வேலன் எடுக்கும் வெறியாட்டு நிகழ்ச்சிகள், சடங்கு முறைகள் பற்றிச் சங்கப்பாக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. சங்க இலக்கியத் தலைவியின் காதல் நோயை அறியாத நற்றாயும் செவிலித்தாயும் அவளது உடலில் ஏற்பட்ட வேறுபாட்டிற்குக் காரணம் வேறு என்று கருதி அதனை சரிசெய்ய வேலன் வெறியாடல் நிகழ்த்துவாள் என்று கருத்து சங்கப்பாக்களில் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

சங்க அகப்பாடல் முருகனுக்கு வெறியாட்டுப் பூசை நிகழ்த்தும் வேலன் தலையில் உயரமான தலையணி அணிந்திருந்ததாகவும், நீண்ட பாகை அவனது முதுகில் தொங்கியதையும் கூறுகின்றது. மேலும் வேலன் வெறியாட்டத்தின் போது ஆட்டை அறுத்து அதன் குருதியைத் தினை மாவோடு கலந்து களத்தில் தூவினான் என்றும் வேலன் வெறியாடுகின்ற இடம் காடு, காவு, துருத்தி, மன்றம், பொதி, கடம்பமரம் போன்றவையாக இருந்தது என்றும்(திருமு.222-226) சங்க இலக்கியத்தில் பதிவுகள் காணப்படுகின்றன. மேலும் விரைந்து மணம் நிகழக்கருதிய குன்றக் குரவனின் காதல்மகள் மலைதோறும் எழுந்தருளியுள்ள இறைவனும், குலதெய்வமுமாகிய முருகக் கடவுளை வேங்கைமலர் தூவித் தேனாகிய பலியைச் சொரிந்து கண்ணீர் மல்க வேண்டி நின்றாள்(ஐங்.259:1-4) என்ற குறிப்பும் புலப்படுகிறது. இவற்றைப் பின்வரும் பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

"வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்து

உருவச் செந்தினை குருதியொடு தூஉய்"

"மறிக்குரல் அறுத்துத் தினைப்பரப்பு இரிஇச்"

முருக வழிப்பாட்டின் சிறப்பு குறித்து திருமுருகாற்றுப்படையில் கூறப்பட்டுள்ளன. முருகனின் அறுபடைவீடுகளாக திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோராடல், பழமுதிர்ச்சோலை ஆகிய தலங்களில் முருகன் வீற்றிருப்பதைப் பற்றித் திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. முருகன் அசுரரை அழித்தமை, கிரவுஞ்ச மலையைப் பிளந்தமை, சேவல் கொடியைப் பெற்றமை, சூரனை வென்றமை, தேவர்கள் சேனைத் தலைவனாகத் திகழ்ந்தமை, தேவர் துயர்தீர்த்தமை, முருகன் பிறப்பு வரலாறு, மயில் ஊர்தியை அடைந்தமை போன்ற பல குறிப்புகள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. மேலும் முருகன் காதல் தெய்மாக மட்டுமல்லாமல் போர்த்தெய்வமாகவும் வீரத்தின் விளைநிலமாகவும் விளங்கியமையை அறியமுடிகிறது.

பேரெழில் பொருந்திய மகளிர் மாடங்களில் நின்று முன்கை கூப்பி முருகப்பெருமானை வழிபட்டனர். மகளிர் பாடும் பாட்டிற்கு இயைய வங்கியம் இசை உண்டாக்க, யாழ், முழவு முரசு முழங்க வெறியாடுவதற்குரிய முருகனுக்கும் பலரும் தொழும் தெய்வங்களுக்கும் விழா எடுத்துச் சிறப்பித்தனர். இவ்வாறு மகளிர் முருகக் கடவுளை வழிபட்டச் செய்தியைப் பட்டினப்பாலை புலப்படுத்துகிறது.

## கொற்றவை

தொல்காப்பியர் பாலை நிலம் என்று தனித்துக் கூறவில்லை. பிற்காலத்தில் தோன்றிய உரையாசிரியர்கள் பாலை நிலம் என்பதனையும் அந்நிலத்திற்குரிய தெய்வத்தினையும் வரையறை

செய்தனர். பாலை நிலத்தைச் சார்ந்த வீரர்களுக்கும் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களுக்கும் தெய்வமாகக் கொற்றவை விளங்கியுள்ளாள். தொல்காப்பியர் கொற்றவைநிலை பற்றி "மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த கொற்றவை நிலையும் அகத்திணை புறனே"20 என்று குறிப்பிட்டுள்ளார். சங்க இலக்கியத்தில் கொற்றவை பற்றிய குறிப்புகள் குறைவாகவே உள்ளன. கொற்றவை சூலி என்ற பெயராலும் அழைக்கப்பட்டுள்ளாள்.

"விடர்முகை யடுக்கத்து விறல்கெழு சூலி"

கொற்றவை வழிபாடு சங்ககாலம் முற்கொண்டே இருந்துள்ளமையும் இக்கொற்றவை வெற்றித் தெய்வமாகவும், முருகனின் தாயாகவும் விளங்கியுள்ளமையை அறியமுடிகிறது. போருக்குச் சென்ற தலைவன் வெற்றியுடன் திரும்ப வேண்டும் என்று வெற்றித் தெய்வமாகிய கொற்றவையைத் தலைவியின் தோழியர் வணங்கியதை நெடுநல்வாடைக்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார்.

"வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ"

"இன்னா அரும்படர் தீர விறல்தந்து

இன்னே முடிகதில் அம்ம"

## நிறைவுரை

மனித இனம் தோன்றிய காலம் முதல் இன்றுவரை இறைச்சிந்தனை இருந்து வருகிறது. இறைவழிபாடு மனித மனதோடு தொடர்புடையது. மனித வாழ்க்கையில் துன்பங்கள், சிக்கல்கள் ஏற்படும்போது இறைவழிபாட்டினை மனிதமனம் நாடியுள்ளது. கடவுள் வழிபாடு தொடக்கத்தில் உருவங்கள் வைத்து வழிபாடு செய்யப்படவில்லை. குறிப்பிட்ட அடையாளங்கள் வைத்தே வழிபாடு செய்யப்பட்டுள்ளன. சங்கத்தமிழர் தெய்வ நம்பிக்கையும் பக்தியும் கொண்டு வாழ்ந்துள்ளனர். இயற்கையின் பேராற்றல்களைக் கண்டு அஞ்சிய மனிதன் பலி கொடுத்து வழிபடும் முறையானது சங்க காலத்தில் இருந்துள்ளன. சிவன், திருமால், முருகன், கொற்றவை, திருமகள், இந்திரன், காமன், நடுகல் ஆகிய இறைவழிபாடு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. இறைவன் கோயில் கொண்டிருந்த இடங்கள் பற்றியக் குறிப்புகள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. இதில் திருமால் பற்றியக் குறிப்புகளே அதிகமாக உள்ளன. திருமால் முழுமுதற் கடவுளாக விளங்கியமையை அறியமுடிகிறது. முருகக் கடவுள் அன்புத் தெய்வமாகவும் காதல் தெய்வமாகவும் போற்றப்பட்டுள்ளான். இவ்வுலகம் தோன்றிய காலம் முதல் இன்றுவரை மனிதனின் மனதைப் பக்குவதப்படுத்தி மன அமைதியைத் தருவது இறைநெறி என்ற நம்பிக்கை நிலவி வருவதை உணரமுடிகிறது.

## References


Ettuthogai Books, (2004) New Century Book House, Chennai, India.

Pathupattu, (2003) Koviloor Madalayam, Koviloor, India.

Subramanian, Sa. Ve., (2005) Tholkappiyam, Manivaasagar Pathippagam, Chennai, India.



## Acknowledgement
Nil

## Funding
This study was not funded by any grant


## Conflict of interest
The author declare that they have no actual or potential conflict of interest, including financial, personal or other relationships with people or organizations that could have inappropriately influenced this work.

**About the License**

© The author(s) 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

M. Parameshwari, Analysis of Theological principles in Sangam Literatures, Indian Journal of Tamil, 2(3) (2021) 8-14. https://doi.org/10.34256/ijot2132